Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆனி 32 | 16-07-94 | சனிக்கிழமை | ஓசை 148

## வேலையின்மையை நீக்க வருடம் 2 இலட்சம் தொழில் தேவை

இலங்கையில், அதிகரித்து வரும் ஊழியப் படைக்கு வேலை வாய்ப்பு வழங்குவதற்காக, வருடாந்தம் இரண்டு இலட்சம் தொழில் வாய்ப்புகளை உருவாக்க வேண்டியிருப்பதாக தெரியவருகின்றது. வருடா வருடம் 175.000 பேர் வரையில் ஏற்கனவே இருக்கும் ஊழியப் படையோடு புதிதாக சேர்த்துக்கொள்கிறார்கள். இதனால் உண்டாகும் வேலைவாய்ப்பு பிரச்சினையை நீக்க வேண்டுமானால் இலங்கையின் பொருளாதாரம் அடுத்த சில ஆண்டுகளில் எட்டு அல்லது ஒன்பது சத வீத வளர்ச்சி பெற்றாக வேண்டும். ஆனால் அவ்விதமான பொருளாதார விருத்தி, இனப்பிரச்சினை தொடரும் பட்சத்தில் எட்ட முடியாத ஒன்றாகவே இருக்கும் என பொருளாதார வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

# ஆட்டோவில் வெடி குண்டு; தேடி அலையும் பொலிஸ்

## கொழும்பு நகர் எங்கும் சல்லடை

(கொழும்பு)

**கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் குண்டுகள் பொருத்தப்பட்ட நிலையில் திரியும் ஆட்டோவை இரகசிய பொலிசார் சல்லடைபோட்டுத் தேடித்திரிவதாக தெரிவிக்கப்படுகிறது.**

தமிழர் ஒருவருக்குச் சொந்தமானதெனக் கூறப்படும் இந்த ஆட்டோ வண்டியில் வெடிகுண்டுகள் பொருத்தப்பட்டிருப்பதாகப் பொலிசாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் பொலிசார் சம்பந்தப்பட்ட ஆட்டோவைத் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி ஆட்டோவில் இருவர் இந்தக் குண்டுகளை எடுத்துச் சென்றுள்ளதாகவும் பொலிசாருக்கு தகவல் கிடைத்துள்ளதாம்.

இதனையடுத்து கொழும்பு நகரிலும் புறநகர் பகுதியிலும் இந்த ஆட்டோவை பொலிசார் சல்லடைபோட்டு தேடித் திரிவதாக பொலிஸ் வட்டாரங்கள் கூறுகின்றன.

## மேலும் 300 ராணுவ அதிகாரிகளுக்கு இந்தியாவில் மேலதிக பயிற்சி

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தின் மேலும் 300 இராணுவ அதிகாரிகள் கூடுதல் பயிற்சிக்காக இந்தியா அனுப்பப்படவுள்ளனர். இவர்கள் இவ்வருட முடிவிற்குள் இந்தியாவிற்கு அனுப்பப்படுவர் என இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா தெரிவித்தார்.

ஏற்கனவே ஒரு தொகுதி இராணுவ அதிகாரிகள் இந்தியாவில் பயிற்சி பெற்று திரும்பியுள்ளதாகவும் இவர்கள் வடக்கு, கிழக்கில் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவத் தளபதி மேலும் தெரிவித்துள்ளார்.

## வீரச்சாவு



**வீரவேங்கை கௌதமி**

மன்னார் மாவட்டத்தில் கடந்த 12-ம் திகதி ஏற்பட்ட எதிர்பாராத வெடி விபத்தொன்றில் விடுதலைப் புலிகள் பெண் போராளி ஒருவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

(5ஆம் பக்கம் பார்க்க)

## சேமமடுவில் விறகு வெட்டச் சென்று

# ராக்கிங்கிற்கு எதிராக காவல்துறை நடவடிக்கை

### காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சமூக சீர் குலைவுகளை ஏற்படுத்தும் ராக்கிங்கில் ஈடுபடுவோருக்கு எதிராக தமிழீழ காவற்துறை நடவடிக்கை எடுக்கவுள்ளது இதுதொடர்பாக தமிழீழ காவற்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் மாணவர் சமுதாயத்திற்கு நேற்று அறிக்கையொன்றை விடுத்துள்ளார் அதன் விபரம் வருமாறு.

எமது விடுதலைப் போராட்டம் நடந்து கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் எமது மக்கள் சொல்லொணா துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் முகங்கொடுத்த வண்ணமுள்ளனர். சிங்கள அரசின் பாரிய இராணுவ நடவடிக்கைகள் ஒரு புறமாகவும் பொருளாதாரத்தடை இன்னொரு புறமுமாக மக்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்நோக்கிய வண்ணமுள்ளனர். அரசின் அடக்குமுறை எவ்வாறாயினும் எமது மக்கள் இவற்றை முறியடிக்கும் வல்லமை பொருந்தியவர்கள் வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த இப்போர்க்கால சூழ்நிலையில் எமது சமுதாயத்தில் முக்கிய அங்கம் வகிக்கும் கல்வியில், எமது தேசியத் தலைமையும்

(5ஆம் பக்கம் பார்க்க)

## வீடு பார்க்கச் சென்றவர் துப்பாக்கிச் சூட்டுக்கு பலி

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பகுதியில் உள்ள தனது வீட்டை பார்க்க சென்ற ஒருவர் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்குஇலக்காகி உயிரிழந்தார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றது. எல்லுப்பொலை கந்தையா (வயது 55) என்பவரே இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்குஇலக்காகி உயிரிழந்தவராவார்.

மேற்படி சம்பவதினத்தின் போது இவரும் வேறு சிலரும் சேர்ந்து தமது வீட்டை பார்க்கவும் விறகு மற்றும் முருங்கைக்காய் போன்றவற்றை பிடுங்கிவருவதற்காகவும் சென்

(5ஆம் பக்கம் பார்க்க)

## விசேட கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சகல ப. நோ. கூ. சங்க தலைவர்களையும், பொது முகாமையாளர்களையும், எதிர்வரும் 18ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை மண்டபத்தில் நடைபெற உள்ள விசேட

(5ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் மோதல்; இரு போராளிகள் வீரச்சாவு

நேற்று முன்தினம் மன்னார் மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலின்போது இரு விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வீரவேங்கை கர்னழகன் (துரை ரவிச்சந்திரன்' வல்வெட்டித்துறைச் சந்தி, வல்வெட்டிக் குறை), வீரவேங்கை மயில்வதனன் (தேவதாஸ் தாஸியஸ், செம்பியன் பற்று தனிப்பனை முகாம், சொந்த இடம் - வெற்றிலைக் கேணி) ஆகிய இரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

இவ்விரு மாவீரர்களின் வித்துடல்கள் இன்று காலை 10.00 மணிக்கு இவர்களது

(5ஆம் பக்கம் பார்க்க)

சேமமடுவில் விறகு வெட்டச் சென்று

வல்வெட்டித்துறை), வீர

(5ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டணி வேட்பாளருக்கு தமிழ்க்குழு கொலை மிரட்டல்

(கொழும்பு)
வன்னி மாவட்டத்தின் கூட்டணி வேட்பாளர் வீ. ஆனந்தசங்கரியை கொலை செய்யப்போவதாக வேறொரு தமிழ்க்குழு வேட்பாளரும், மற்றொரு உறுப்பினரும் பயமுறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது,

இதனையடுத்து வன்னி மாவட்டத்தில் ஆயுத பாணிகளின் அச்சுறுத்தல் எதுவுமின்றி பிரசாரத்தில் ஈடுபட உதவுமாறு பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு கூட்டணி வேண்டுகோள்விடுத்துள்ளது-

நேற்று முன்தினம் வவுனியாவிலுள்ள இயக்க அலுவலகம் ஒன்றின் முன்பாக அவ் இயக்கத்தின் வேட்பாளரும் வேறு சிலரும் சேர்ந்து, கூட்டணி வேட்பாளர் ஆனந்தசங்கரியை தாக்கப்போவதாக பயமுறுத்தினர் எனவும் ஆயுதபாணிகளாகக் காணப்பட்ட இக்குழுவினர் கொலை செய்யப்போவதாகவும் ஆனந்தசங்கரியை மிரட்டியுள்ளனர் எனவும், அவ்வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளைமேற்கொள்ளுமாறு பொலிசாருக்கு உத்தரவிடும்படியும் குறிப்பிட்ட இயக்கத் தவைருக்கு இதுகுறித்துஅறிவுறுத்துமாறும் பிரதிப்பொலிஸ் மா அதிபருக்கான வேண்டுகோளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தேர்தல் வன்முறைகளில் இறந்தவர் தொகை அதிகரிப்பு

(கொழும்பு)
நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட வன்முறைகளில் இறந்தவர்களின் தொகை ஐந்தாக அதிகரித்துள்ளது.

பொது ஜன ஐக்கிய முன்னணியைச்சேர்ந்த மூவரும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த இருவரும் மரணம் அடைந்துள்ளனர் மேலும் பலரின் நிலைமை மோசமடைந்து வருவதாக மருத்துவ மனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# காணாமல்போன மூவரும் சடலமாக மீட்பு

(வவுனியா)
கடந்த சனிக்கிழமை, சேமமடு 2-ம் யூனிட் பகுதியில் இராணுவததினர் முன்னேறி வந்து பதுங்கியிருந்த போது காட்டுக்குள மரம், தடிகள வெட்டச் சென்று காணாமல் போன மூவரும் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பேதுறு செல்வநாயகம் என்னும் குடும்பஸ்தர் கையில் சூட்டுக் காயங்களுடன் உயிர் தப்பி வந்தமை தெரிந்ததே.

இச் சம்பவத்தில் காணாமல்போனபொது மக்களாகிய சேமமடு 2-ம் யூனிட்டைச் சேர்ந்த கு. ப. சின்னராசா (46), கந்தசாமி பொன்னாந்து (30), செல்வராசா (42) ஆகியோரது சடலங்கள் திங்கட்கிழமை காலை மீட்கப்பட்டன.



வீரவேங்கை மயில்வதனன்



வீரவேங்கை கர்னமூகன்

# இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் மட்டுமே பேச்சுவார்த்தை

## ஐக்கிய தேசியக்கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)
இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் பேச்சுவார்த்தை மூலம் அல்லது அவசியமானால் படைபலம் மூலம் வடக்கு - கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும். இலங்கையின் இறைமை, ஒருமைப்பாடு பாதுகாக்கப்படும் இதனடிப்படையில் விடுதலைப்புலிகளுடனான யுத்தத்திற்கு தீர்வு காணப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ளது-

மந்திரிகளின் எண்ணிக்கை குறைப்பு, ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிப்பு, 18 வயதிற்கு மேற்பட்ட இளைஞர்களுக்கு மாதாந்த சலுகைப் படியாக 1200 ரூபா, வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை பலனளிக்காவிடில் இராணுவத் தீர்வு என ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாப

(5ஆம் பக்கம் பார்க்க)

# மதவாச்சியில் எதிரணியினரின் ஊர்வலம் மீது தாக்குதல்

## 22 பேர் படுகாயம்; வாகனங்கள் சேதம்

(மதவாச்சி
மதவாச்சிப் பகுதியில் எதிர்க்கட்சியின் ஊர்வலம் மீது நடத்தப்பட்ட தாக்குதலின்போது 22 பேர் காயமடைந்ததுடன் இரு லொறிகளும் அடித்து நொருக்கப்பட்டன.

மதவாச்சி கெப்பிட்டிகொல்லாவைக்கு அருகில் கடந்த திங்கட்கிழமை இரவு 8 மணியளவில் எதிர்க்கட்சி ஒன்றின் ஊர்வலம் ஒன்று பதவியா நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

இவ் ஊர்வலம் சென்று கொண்டிருந்தபோது திடீரெனப் புகுந்துகொண்ட குழு ஒன்று ஊர்வலத்தினர் மீது கற்களாலும் பொல்லுகளாலும் கடுமையாகத் தாக்கிவிட்டுக் காட்டுப்பாதையூடாகத் தப்பித்துக் கொண்டது

(5ஆம் பக்கம் பார்க்க)

ஐ. தே. க. உறுப்பினர் கொலை தொடர்பாக

# எதிரணி வேட்பாளர் உட்பட 5 பேர் பொலிசாரால் கைது

(கொழும்பு)
கடந்த திங்களன்று பொலநறுவையில் கொல்லப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் ஜெயந்திபுர மகளிர் அணித் தலைவியின்கொலை தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர் உட்பட ஐவர் பொலிசாரினால்

(5ஆம் பக்கம் பார்க்க)

# இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

# அவசரகால சட்டம் நீக்கினாலும் நடைமுறையில் மாற்றமில்லை

அவசரகாலச்சட்டம் நேற்று நள்ளிரவுடன் முடிவுக்கு வந்தாலும் தொடர்ந்தும் முன்னர் போலவே செயற்படுமாறு அரசாங்கம் தனது உயர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி லண்டன் பி. பி. ஸியின் சந்தேசிய வானொலி இதனைத் தெரிவித்தது.

நேற்றுடன் அவசரகாலச் சட்டம் முடிவுக்கு வந்தாலும் அதனை முடிவுக்குக் கொண்டு வர ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா அனுமதி வழங்கப் போவதில்லை என எதிர்க் கட்சிகள் தெரிவிக்கின்றன.

அரசாங்க சட்டத்தரணிகள் இதுபற்றிக் கூறுகையில், அவசரகாலச் சட்டத்தின் கீழ் தற்போது அறுநூற்றி எழுபத்திமூன்று பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், இவர்களின் உத்தியோகபூர்வ தடுப்பு காலாவதியானால் அவர்களை விசாரணைமேற்கொள்ளாது மீண்டும் ஆறு ஆண்டுகளுக்கு வைத்திருக்கலாம் என்றும் இதனை

(5ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வாங்கவும் விற்கவும்

பாவித்த புத்தகங்கள், கொப்பிகள், சஞ்சிகைகள், சமயம், சாஸ்திரம், பாஸ் பேப்பர், மருத்துவம், கதைப் புத்தகங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த இடம். V. R. M 34, மானிப்பாய் றோட் யாழ்ப்பாணம். (8830)

### மிருதங்கம்

ஒரு மிருதங்கத்திற்கு சாதம் போட ரூபா 100. கைவசம் புதிய மிருதங்கங்கள் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு கோவிந்தபிள்ளை விஜயகுமார், 192/1 நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி யாழ்ப்பாணம். (8811)

### பாலமுருகன் வண்ணப்படம்

தோகை விரித்தாடும் மயிலுடன் ஞானவேல் கையேந்தி ''அஞ்சேல்'' என்று அபயங் காட்டி நிற்கும் பால முருகன் வண்ணப்படம் -450 கிறாம் மில்க்வைற் சலவைத்தூள் பக்கற்றுடன் அன்பளிப்பாகக் கிடைக்கிறது. இருப்பு உள்ள வரை மட்டுமே. முந்துங்கள். ''மில்க்வைற்'' (சி-9936)

### குழாய்க்கிணறுகள் அமைப்பு

கலட்டி குடியேற்றத் திட்டத்தின் குழாய்க்கிணறு அமைக்கும் வேலையில் தேச நிர்மாணிகள் ஈடுபட்டுள்ளனர்.

குடியிருப்புப் பிரதேசங்களிலுள்ள குடிநீர்ப்பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாக ஜேர்மன் உதவித்திட்டத்தின் கீழ் பல இடங்களிலும் இவ்வாறு தேச நிர்மாணிகள் குழாய்க் கிணறுகளை அமைத்து வருகின்றனர்.

அண்மையில் சனசமூக நிலையங்கள், பாடசாலைகள், பொது இடங்கள் பலவற்றிலும் அமைக்கப்பட்ட குழாய்க் கிணறுகள் மூலம் பலரும் பயன்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### வேட்புமனு நிராகரிப்பு

(வவுனியா)

வன்னியில் சிங்கள சுயேட்சைக் குழுவொன்றின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

வன்னி மாவட்டத்தில் பியதாச திசநாயக்கா, நிசங்க திசநாயக்கா என்பவர்கள் [illegible]

## கொழும்பில் மொகமட் கண்டியில் ஹமீட் போட்டி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்டப் பட்டியலில் சபாநாயகர் எம். எச்.மொகமட், வீரசிங்க மல்லிமராச்சி, டிரோன் பெர்ணான்டோ, சுனித்ரா ரணசிங்க ஆகிய அமைச்சர்களும் போட்டியிடவுள்ளனர்.


கண்டி மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் முதன்மை வேட்பாளராக ஏ.சி.எஸ் ஹமீட் போட்டியிடுகின்றார். காமினி திசாநாயக்கா, முன்னாள் லேக் ஹவுஸ் தலைவர் சரத் அமுனுகம, தகவல் திணைக்கள முன்னாள் பணிப்பாளர் சுனந்த மத்தும பண்டார ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

## இரட்டை சூட்டடுப்புகள் இலவசமாக கட்டப்பட்டது

வடமராட்சி கோட்டம் அல்வாய் பகுதியிலுள்ள இடம் பெயர்ந்தோருக்கான 15 குடிசைகளில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சக்திப் பகுதியினர் இலவசமாக இரட்டைச் சூட்டடுப்புக்களைக் கட்டி கொடுத்துள்ளனர்.

யாழ் மாவட்ட அரசியல் துறையினரால் கரும்புலிகள் நினைவாக அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள இடம் பெயர்ந்தோருக்கான குடிசைகளிலேயே இவ்வாறு இரட்டைச் சூட்டடுப்புக்கள் கட்டி வழங்கப்பட்டுள்ளன. வருவாய் குறைந்தோருக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமைகிறது.

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



**துணைப்படை வீரர் குட்டி**

(கணேசலிங்கம் சபேசன்)

பிறப்பு: 25-1-1974 வீரச்சாவு: 16.07.1991

## நினைவு கூருகின்றோம்...

### 16-07-1994...

1986-ம் ஆண்டு இதேதினத்தில் பெருவெளியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

★ **ஜெய்சங்கர்** (- - இருதயபுரம், மூதூர்-திருமலை)

★ **இராசநாயகம்** (- - மணற்சேனை - திருமலை)

★ **சின்னத்துரை குணநாயகம்** (- - பெரியவெளி, மூதூர் - திருமலை)

★ **மு.அருளம்பலம்** --) பெரியவெளி, மூதூர்- திருமலை)

திருமலை-மூதூர், மல்லிகைத்தீவுப் பகுதியில் இடம்பெயர்ந்தோர் முகாமொன்றை முற்றுகையிட்ட சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டு வீரச்சாவெய்திய,

★ **கோணாமலை இராசநாயகம்** (மல்லிகைத்தீவு, மூதூர் - திருமலை)

மணலாறு - நெடுங்கேணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரின் போது வீரச்சாவெய்திய,

**லெப். ராஜ்குமார்** (சூசைப்பிள்ளை ஆசீர்வாதம் - மணற்குடியிருப்பு - முல்லைத்தீவு)

**சசி** (விசுவநாதன் சிவலிங்கநாதன்-வவுனிக்குளம், மாங்குளம் - முல்லைத்தீவு)

திருமலை - மூதூர்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட குழந்தைகள், பெண்கள், மற்றும் இடம்பெயர்ந்தோரான 30 பேர் உட்பட மணற்சேனை, பச்சனூர், பெருவெளிப் பகுதிகளைச் சேர்ந்த 67 தமிழர்கள்.

1988-ம் ஆண்டு யாழ்-சுழிபுரத்தில் இந்தியப்படையினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**கப்டன் காசிம்** (பிரான்சிஸ் பிள்ளை ஜெகநாதன் - முருங்கன் - மன்னார்)

இதே தினம் வீரச்சாவெய்திய,

**மோகன்** (- - கிளிநொச்சி)

**சுமன்** (குமாரசாமி சந்திரசேகரம் - கிளிநொச்சி)

கிளிநொச்சி - செல்வநகரில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோத சக்திகளுடனான சமரில் வீரச்சாவெய்திய,

**ஜெயக்கொடி** (நாராயணபிள்ளை ஜெயச்சந்திரன் - செல்வநகர் - கிளிநொச்சி)

அம்பாறை - பொத்துவில் இன்ஸ்பெக்டர் ஏத்தம் பகுதியில் தேசவிரோதசக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய

★ **ஜெயா** (க. ஜெயசீலன்- பொத்துவில்- அம்பாறை)

அம்பாறை- றொட்டைப் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்விவசாயிகள்.

1989-ம் ஆண்டு அம்பாறை - 35-ம் கிராமம் பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**தயாளன்** (கணபதிப்பிள்ளை கோபாலரத்தினம் - துறைநீலாவணை - மட்டு)

**சிராகரன்** (- - நீலாவணை - மட்டு)

**ஈஸ்வரன்** (- - ஆரையம்பதி - மட்டு)

1990-ம் ஆண்டு மாங்குளத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**குணம்** (செல்வரத்தினம் சுரேஸ்குமார்-ஐந்துவேம்படி தாவடி தெற்கு-யாழ்)

யாழ்-கோட்டையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**லெப்.ஹிம்பிறவுண்-சின்னவன்** (பரராசசிங்கம்

**கப்டன் இல்** (சண்முகம் தபேந்திரன்-செல்வபுரம் வடக்கு மாங்குளம்-முல்லைத்தீவு)

**மேஜர் யாசீன்-யாசீர்** (கந்தசாமி சிவதாஸ் சின்னப்பொடி-மிருசுவில், கொடிகாமம்-யாழ்)

**கப்டன் டயஸ்** (ஜஸ்ரின் றோய்பேபியன்-கரம்பொன் ஊர்காவற்துறை-யாழ்)

**லெப்.யூசி** (ஆறுமுகம்பிள்ளை சிறிசுந்தரம்-ஏ. ஜி-ஏ ஒழுங்கை-வல்வெட்டித்துறை)

**லெப்.வினோத்** (மோகனதாஸ்-சுரேஸ் நிரஞ்சன் கேணிப்புலம், மயிலிட்டி-காங்கேசன்துறை)

**2-ம் லெப். மௌலி** (தாமோதரம்பிள்ளை மாணிக்கவாசகன் - கொக்குவில் கிழக்கு - யாழ்)

**2-ம் லெப். சங்கர்** (வடிவேல் ஜெயந்திரன் - நாவற்குழிச்சந்தி, கைதடி - யாழ்)

**2-ம் லெப். காண்டீபன்** (வைரவப்பிள்ளை உமாநேசன் - உடுத்துறை, தாளையடி - யாழ்)

**விக்கினேஸ்** (பாலசிங்கம் பால்மநகன் - வட்டுக்கோட்டை கிழக்கு - யாழ்)

**விசித்திரன்** (நிற்சிங்கர் வல்லிபுரநாதன் - தட்டான்குளம் வீதி, - சாவகச்சேரி,

**அஜந்தன்** (அல்போன்ஸ் சேகர் - மெமோறியல் வீதி, மானிப்பாய் - யாழ்)

**சதீஸ்** (தம்பையா யோகநாதன் - வரணி, கொடிகாமம் - யாழ்)

**குமரப்பா** (பாலசுப்பிரமணியம் சிவபாலன் - பன்னாலை, தெல்லிப்பழை - யாழ்)

**சுகந்தன்** [illegible]

---


கிளிநொச்சி விவசாயபீட

### மாணவர்கள் கவனத்திற்கு

18 - 7 - 94 திங்கட்கிழமை அல்லது அதற்குப்பின் நடைபெறும் முதற்படகுச் சேவைக்குச் செல்வதற்காக அத்தினம் பிற்பகல் 2 மணிக்கு யாழ். ஆரியகுளம் பேரூந்து நிலையத்திற்குச் சகல மாணவர்களும் வருமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

குறிப்பு:-

வடமராட்சி மாணவர்கள் கிளாலிக்கு வருமாறு கோரப்படுகின்றீர்கள்.

விவசாய மாணவர் ஒன்றியம்,
விவசாயபீடம்,
கிளிநொச்சி

(8809)



ஜோ. எகட்டனின்

### ஜெசித்தாரா வழங்கும்

திருவிழாக்கால, சுத்தபோசன உணவுப் பொட்டலங்கள், தயிர், மோர், அப்பளம் மற்றும் பக்தகோடிகள் விரும்பும் தித்திப்பான சுத்தபோசன உணவுப் பொட்டலங்கள், வெள்ளி, செவ்வாய், மற்றும் விரத தினங்களில் விசேஷமாக தனியாக தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன. விரையுங்கள்.

**ஜெசித்தாரா,**

[சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை சுண்டுக்குளி.]

(சி-9918)

திசநாயக்கா என்பவர்கள் தலைமையிலான சுயேட்சைக் குழுவின் வேட்புமனுவே தெரிவத்தாட்சி உத்தியோகத்தரால் நிராகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசிற்கு விசுவாசம் தெரிவித்து, இக்குழுவின் தலைவர் கையெழுத்திடாத காரணத்தாலேயே இவர்களது வேட்புமனு நிராகரிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

## இரு பொலிஸார் காயம்

(கொழும்பு)

அனுராதபுரத்தில் இடம்பெற்ற தேர்தல் வன்முறைகளால் இரு பொலிஸார் காயமடைந்ததாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

---


செல்வன்
S. கணேசன்

(தேங்காய் விற்பனையாயாளர்) மூளாய்வீதி, வட்டுக்கோட்டை.
அவர்களின் ஆதரவில்

**அராலி ஐக்கிய விளையாட்டுக் கழக வளர்ச்சி நிதிக்கான**

**அதிர்ஷ்டலாபச்சீட்டு**

முடிவுகள்- 14-07-94
(வியாழன்)

1-ம் பரிசு இல. - 651
2-ம் பரிசு இல. - 585
3-ம் பரிசு இல. - 130

ஆறுதல் பரிசு இலக்கம்:
176,510,176,290,577

ஐக்கிய விளையாட்டுக் கழகம்

(சி.8832)


---

நாசம் செய் எதிரிகளை நாடி அழித்திட
பாசத்துடன் படையில் இணைந்தவனே!
தேசத்தை விடிவுக்காக தேகம் இழந்தாலும் இங்கு
வீசும் காற்றிலும் உம்பெயர் விளங்கும்!

மூத்த விநாயகர் வீதி,
நல்லூர்.
குடும்பத்தினர்
(8826)

---

## 3-ம் ஆண்டு நினைவு அஞ்சலி



### வீரவேங்கை குமரப்பா
[பாலசுப்பிரமணியம் சிவபாலன்]

பலாலியை பிறப்பிடமாக கொண்டவரும் பன்னாலையை வசிப்பிடமாகக்கொண்டவரும்ஆனையிறவில் வீரச்சாவெய்தியவரும் ஆவார்.

**பிறப்பு: 6. 8. 1974 வீரச்சாவு: 16. 7. 1991**

எம் இனிய ராசனே சின்னவனாய்
இம் மண்ணில் நீ மறைந்த நாளின்று
எம் இதய மகனே உனை
மனமார வாழ்த்திட நெஞ்சம் ஏங்குதடா
எம் பாச ராசனே இன்றோ -
உமது கல்லறையை கண்ணீரால்
கழுவித்தவிக்கிறோம்.

மீசாலை
வடக்கு,
கொடிகாமம்.

அம்மா, பவா, மோசன், ரஞ்சன்,
சாந்தினி, நிறோஜினி,
சகல குடும்பத்தினர்.

(8816)

---

**லெப்.ஜிம்பிறவுண்-சின்னவன்** (பரராசசிங்கம் மகேந்திரன்-மகேந்திராவீதி-யாழ்ப்பாணம்)

மட்டு-பாலையடிவெட்டையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரின்போது வீரச்சாவெய்திய,

**லெப். கேணல் றீகன்** (இராசையா சிற்றம்பலம் -வெல்லாவெளி-மட்டு)

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட சேனைக்குடியிருப்பு 01 ஐச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

மட்டு-மகிழடித்தீவுப் பகுதியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானக்குண்டுவீச்சில் கொல்லப்பட்ட 05 தமிழர்கள்.

1991-ம் ஆண்டு மணலாற்றில் எமது முகாமை நோக்கிவந்த சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**2 ம் லெப்.யோகராசா** (கந்தையா நாகேந்திரம் -2-ம் குறிச்சி, பழுகாமம்-மட்டு)

**ராமராஜ்** (பேரின்பம் கணேசமூர்த்தி-காந்திபுரம், பழுகாமம்-மட்டு)

**சூரன்** (சிவலிங்கம் குமார் - கிருஷ்ணன் கோவிலடி, கிரான்-மட்டு)

**கப்டன் கிளாஸ்மிக்கோ** (பேரின்பராசா ஜீவானந்தராசா-கிளிவெட்டி, மூதூர்-திருமலை)

**2 ம் லெப்.கௌரிகரன்** (யோகராசா மகேந்திரன்-கோபாலபுரம், நிலாவெளி-திருமலை)

**லெப்.நிக்சன்** (ஜெயபாலன் அன்ராசா-10-ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு-மணலாறு)

**கனகசபாபதி** (பாண்டியன் நாகேந்திரம்-கள்ளப்பாடு-முல்லைத்தீவு)

**மேஜர் வீமன்** (உ.சோலை விக்கினேஸ்வரன்-சகாய வீதி, அடம்பன்-மன்னார்)

**கப்டன் இளங்கோ** (கனகராசா ஜெயந்தன்-பாரதி வீதி, கம்பர்மலை-வல்வெட்டித்துறை)

**தியாகலிங்கம் சூட்டி** (நாகலிங்கம் ஜெயலிங்கம்-மூளாய், சுழிபுரம்-யாழ்)

**கட்டப்பொம்மன்** (மரியாம்பிள்ளை இராசன்-11-ம் வட்டாரம், நெடுந்தீவு-யாழ்)

**மூர்த்தி** (தம்பிராசா அனிதராசா-வராத்துப்பளை-பருத்தித்துறை)

யாழ்-வடமராட்சி, பொலிகண்டியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த.

**தைரியம்** (நடராசா ஆனந்தராசா-கொற்றாவத்தை, பொலிகண்டி-வல்வெட்டித்துறை)

**வேல்ராஜ்** (அலுக்காஞ்சி வின்சன்ட் அமலதாஸ்-பலாலி-யாழ்)

ஆனையிறவு முகாம் தகர்ப்பு முயற்சியாக வெற்றிலைக்கேணியிலிருந்து கட்டைக்காட்டுக்கு முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய,

**ராவ்** (சின்னையா மோகேஸ்வரன்-எருவில் களுவாஞ்சிக்குடி-மட்டு)

**சுகந்தன்** (பூபாலசிங்கம் பூலோகச்சந்திரன் - புன்னாலைக்கட்டுவன் வடக்கு - யாழ்)

**சிறிரங்கன்** (யோகதாஸ் நேசராஜா - துன்னாலை வடக்கு, கரவெட்டி - யாழ்)

**புஸ்பன்** (நாகராசா குலேந்திரன் நாவற்குழி தெற்கு, கைதடி யாழ்)

**யசோ** (லோகேஸ்வரன் சுதாகர் - 614, மானிப்பாய் வீதி, ஒட்டுமடம் - யாழ்)

**அனுஷன்** (தேவசகாயம் குணசிங்கம் - டேவிற் வீதி, குருநகர் - யாழ்)

**பப்பா** (செல்வம் கணேஷ் - கமால் ஒழுங்கை - யாழ்ப்பாணம்)

**துணைப்படை வீரரான, குட்டி** (கணேசலிங்கம் சபேசன் - மூத்தவிநாயகர் வீதி - நல்லூர்)

பொலிகண்டியில் இடம்பெற்ற வெடிவிபத்தின் போது எமைப் பிரிந்த நாட்டுப்பற்றாளரான,

**குயிலன்** (இரத்தினம் வர்ணகுலசிங்கம் - ஊறணி, வல்வெட்டித்துறை - யாழ்)

மட்டு - பழுகாமம், கொக்கட்டிச்சோலை, வவுணைத்தீவு, உன்னிச்சை 9-ம் கட்டை முகாம்களிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர் சாமந்தியாறு, நெல்லிக்காடு, பாலம்போட்ட மடு, உப்புக்குளம் கிராமங்களைச் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர். இந் நடவடிக்கையில் இராணுவம் கண்மூடித்தனமாகச் சுட்டதில் சிறுவன், பெண், இளைஞன் உட்பட கொல்லப்பட்ட 06 தமிழர்கள்.

1993 -ம் ஆண்டு மண்டைதீவு, பண்ணைவீதியில் அமைந்துள்ள சிறிலங்கா இராணுவத்தினரின் காவலரண் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய,

**லெப். புனிதன்** (கனகசபை செங்குட்டுவன் - பாலாவோடை, காரைநகர் - யாழ்)

**லெப். கோபால்** (கந்தையா கோபாலன் - சங்கத்தானை - சாவகச்சேரி)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் கொடூரமானமுறையில் அடித்துக் கொலை செய்யப்பட்ட வந்தாறுமூலை - பாசிக்குடாவைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன். பூநகரிப் பகுதியிற் சிறிலங்கா விமானப்படையினர் நடாத்திய அகோர விமானக் குண்டுவீச்சுத் தாக்குதலில் பலியான பொதுமகன்.

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**

★ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்கள்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-9925)

## 3-ம்ஆண்டுநினைவலைகள்



**கப்டன் இளங்கோ**
(கனகராசா ஜெயந்தன்)
வல்வெட்டித்துறை

பிறப்பு: 03 - 10 - 1972 வீரச்சாவு: 16 - 07 - 1991

நேசத்தின் பிறப்பிடமே நினைவின் சுகந்தமே
தேசத்தின் இன்னல் தனைத்துடைத்திட எழுந்தவனே
பாசநெஞ்சமே பிரிந்துனைப் பரிதவிக்கின்றோம்
நாசக்காரர்களை வீசியழித்த வீரனே.

மாண்டு நாள் பல ஆகலாம்
ஆண்டுதான் பலவாகிக் கழியலாம்
பூண்டிருந்த பாசநினைவலைகள் மாறாதையா
ஈண்டிங்கு உம் நினைவில் அஞ்சலிக்கிறோம்.

மலர்கள் மலரலாம் உதிரலாம்
மலர் முகமாய் சிரித்த கண்ணா உன்
மனமார்ந்த நினைவு மலர் வாடாதையா
மணலாற்று வீரகாவியமும் மறவாதையா.

அஞ்சலி மலர்களைத் தூவி நிற்கும்.
அப்பா, அம்மா, தம்பிமார்
கஜந்தன், மயூரன்.

பாரதி வீதி, கம்பர்மலை,
வல்வெட்டித்துறை. (8819)

## 31-ம்நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 6-10-58

மறைவு: 16-6-94

**அமரர் மா. வல்லிபுரநாதன்**

## காபந்து அரசாங்கத்திற்கு சிறு அமைச்சரவைபோதும்

### தேர்தல் ஆணையாளர் கருத்து

காபந்து அமைச்சரவையில், குறைந்தளவு அமைச்சர்கள் பணியாற்றுவதேபோதுமானது என தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா பி.பி.சிக்கு தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை எனக் கூறக்கூடியதாக சிறியளவு காபந்து அமைச்சரவையே தேவையானது. இது அரசியல் சாசனத்துக்கு புறம்பானது அல்ல என்றாலும், அரசியல் சாசனத்தின் அடிப்படைக் கருத்துக்கு ஒவ்வாதது என அவர் கூறினார்.

## மன்னிப்புச்சபை வலியுறுத்து

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலுக்கு முன்பாக, மனித உரிமைகளைப் பாதுகாப்போம் என அரசியற் குழுக்கள் உறுதியான வாக்குறுதி அளிக்க வேண்டுமென சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்தியுள்ளது.


**ஜெயாவின் சேவைகள் 2**
ஒன்று வியாபாரிகட்கு
இரண்டு பாவனையாளர்கட்கு

அழகிற்கு மெருகூட்டும்
அழகு சாதனப் பொருட்களின்
நவீன காட்சியகம்

# ஜெயா அழகுமாடம்

★ அழகு சாதன அன்பளிப்புப் பொருட்கள்
★ மணிக்கூட்டு வகைகள்
★ கிளாஸ்செற், கண்ணாடி உபகரணங்கள்
★ எவர் சில்வர் பொருட்கள்
★ தையல் வேலைகளுக்கான சகல வகைப் பொருட்கள்
★ இமிற்றேசன் பொருட்கள்
★ பிளாஸ்ரிக் வகைகள்

இவைகளை மொத்தமாக பெற்றுக்கொள்ள
↓
187, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

பாவனையாளரின் சில்லறைத் தேவைகளுக்கு
↓
177A, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு: மணமகளுக்குரிய அரங்கேற்ற கலை நிகழ்வுகளுக்கான சோடனை வகைகள் வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

(சி-9923)


சன்மார்க்க சபை - குரும்பசிட்டி
மணிவிழா நிகழ்ச்சித் தொடர் - 07

### நாடகமும் அரங்கியலும் கல்வியியற் கருத்தரங்கு

இடம்:- செங்குந்தா இந்துக்கல்லூரி.
திருநெல்வேலி கிழக்கு.
காலம்:- 17.07.94 ஞாயிறு காலை 8.30 மணி
தலைவர்:- கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை

கருத்துரைகள்
(அ) தமிழர் உரிமைப் போராட்டமும் நாடகமும்
செல்வி இ. ஜெயரஞ்சனி
(ஆ) போராட்ட வளர்ச்சியும் நாடகங்களும்
திரு. க. திலகநாதன்
(இ) கற்கைநெறியாக அரங்கு
திரு. த. ரதிதரன்
(ஈ) தொகுப்புரை
பேராசிரியர் கா. சிவத்தம்பி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(8822) - மணிவிழாச்சபை

கலைஞர் வேல் ஆனந்தன் ஆடல் அணியினரின்

### ★ முழங்கும் முரசு ★

[ ஆடற்கதை S. OPERA ]

திகதி மாற்றம்

16-7-94 இன்று நடைபெற இருந்த நிகழ்ச்சி 30 - 7 - 94 ஆம் திகதிக்கும்,
17-7-94-ல் நடைபெற இருந்த நிகழ்ச்சி 31 - 7 - 94-ம் திகதியிலும் நடைபெறும்.

(8815) கலைக்கோவில்


ஜோ. எகட்டனின்
**ஜெசித்தாரா**
தரும் தோழமையுள்ள செய்தி

உங்களுக்குத் தேவையான மேலைத்தேய, கீழைத்தேய, உணவு வகைகளை உங்கள் நாவின் ரசனைக்கேற்ப கட்டளையிட்டுப் பெற்றுக்கொள்ளலாம். விபரங்களை நேரில் அறியுங்கள்.

ஜோ. எகட்டனின்
ஜெசித்தாரா,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை
சுண்டுக்குளி.
(சி-9919)


## புதுமை - நாடக வரலாறு காணாத புதுமை

[நாடக ரசிகப் பெருமக்களுக்கும், நம் இனிய தமிழீழ மக்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்



## அமரர் மா. வல்லிபுரநாதன்

எம் இனியவனே நாம் இனி எங்கே உனைக்
காண்போம்


மண விழாக் கோலம் பூண்ட நீ
மலர் வாசனை மாறுமுன்
எங்கய்யா சென்றாய்
செய்தி கேட்டு இதயமே
இயங்க மறுத்தது போல்
அதிர்ச்சியுணர்வு. காலன்
உன் உயிரைப் பிரித்து தன்
கயமத்தன்மையைக் காட்டிவிட்டான்
எங்கய்யா உனைக் காண்போம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்கள்

கொற்றாவத்தை,
ஆவரபபிட்டி. (8823)

---

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
02.12.1975

வீரச்சாவு
16.07.1991

## லெப். வினோத்

(மோகனதாஸ் சுரேஸ் நிரஞ்சன்)

[மயிலிட்டி]

தாயகம் மீட்டிடும் காவியத் தலைவனின்
தானையின் வேங்கையாய் தாவிய வீரனே!
எல்லையை மீறிய எதிரியை வீழ்த்திட
எரிமலை யாகியே எழுந்த நம் வீரனே!
விடுதலை விடுதலை விடுதலை என்றுமே
வீசிடும் காற்றுடன் வீசிய வீரனே!
களத்தினில் ஆடியே காவியமானாய்
சண்களில் ஆடியெம் நெஞ்சினில் வாழ்வாய்!

என்றும் உம் நினைவுடன் வாழும்

மயிலிட்டி: உற்றார், உறவினர்கள்.

(8828)

---



யாழ் மாவட்ட கலை பண்பாட்டுக் கழகமும்,

காரைநகர் விக்காவில் கலைஞர்களும்

இணைந்து மேடையேற்றும்

## முத்தைதம்பி தேவதாசனின்

# “பூதத்தம்பி”

யாழ்ப்பாண வரலாற்று இசைநாடகம்

**இடம்: யாழ். இந்துக்கல்லூரி மைதானம் காலம்: 16-07-1994 சனிக்கிழமை இரவு 7.30மணி**

★ யாழ்ப்பாண வரலாற்றை அறிய மாணவர்கள் பாருங்கள்.

★ ஈழப்பெண் ஒருத்தியின் ஈடுஇணையற்ற துணிவைக்காண இல்லத்தரசிகள் பாருங்கள்.

★ அன்னியர் ஆட்சியின் அரசபயங்கரத்தைக் காண அனைவரும் பாருங்கள்.

★ அப்பாவிப் பெண் ஒருத்தியின் வீட்டுவாசலை ஆனந்தமாய் தட்டிய தென்றல் கொடும் புயலாக மாறிக் கோரதாண்டவ மாடிய கோலத்தைக் காண எல்லோரும் வாருங்கள்.

ரிக்கட்டுகளை மைதான நுழைவாயிலில் பெற்றுக் கொள்ளலாம்.

ரிக்கட் விபரம்: ரூபா 20/-, 50/-, 100/-, 500/-, 1000/-

- யாழ். மாவட்ட கலை பண்பாட்டுக் கழகமும், காரைநகர் விக்காவில் கலைஞரும்.

---

ஆதரவு நல்கும் இ. சுப்பிரமணியம்

மிதிவண்டி விற்பனை நிலையம், சுன்னாகம். (சி-9983)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

**நாகலிங்கம் ஜெயலிங்கம்**

(குட்டி தியாகலிங்கம்)

பிறப்பு 15-05-1972 — வீரச்சாவு 16-07-1991

அன்பின் செல்வமே - ஜெயா
நீ மறைந்து மூன்று ஆண்டு
சென்றாலும் எம் இதயங்களில்
என்றும் வாழ்ந்து கொண்டே இருக்கிறாய்

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**நாகலிங்கம் குடும்பத்தினர்.**

மூளாய் தெற்கு,
சுழிபுரம்.
(8813)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 12- 06 - 1971

வீரச்சாவு 16- 07- 1991

**2-ம் லெப். சங்கர் - துதி**

**(பொன்னுக்கோன் ஜெயந்திரன்)**

தமிழீழ தாகத்துடன் தளராத உறுதியுடன்
தலைவனின் வழிகாட்டலில்
தளராது களமாடிய வேங்கையே
தவழ்கிறது உன்முகம் எம் நெஞ்சில்

சிங்கமலை,
நாவற்குழி சந்தி,
கைதடி.
- குடும்பத்தினர்.
(8805)

# தேர்தல் வன்முறை ஆராய உயர்மட்ட மாநாடு

(கொழும்பு)

கடந்த திங்களன்று வேட்பு மனுக்கள் தாக்கல் செய்தபின் இடம்பெற்ற வன்செயல்களைத் தொடர்ந்து உயர்மட்ட பாதுகாப்பு மகா நாடொன்றை கூட்ட ஜனாதிபதி டி-பி- விஜேதுங்கா முடிவு செய்துள்ளதாக தெரிய வருகிறது-

பொலிசார் இதுபோல சம்பவங்கள் இனிமேலும் இடம்பெறாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறும் அவர் கோரவுள்ளார் எனவும், திங்களன்றைய வன்செயல்கள் தொடர்பாக பொலிஸ் மா அதிபரிடமிருந்து ஜனாதிபதி அறிக்கையொன்றை கேரியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



**2-ம லெப். காண்டீபன்**

**(சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படைப் பிரிவு)**

**(வைரவிப்பிள்ளை உமாநேசன் (நேசன்)**

பிறப்பு 15. 02. 1971 — வீரச்சாவு 16. 07. 1991

சின்னமகன் எங்கள் செல்வமகன் அன்றொருநாள்
அன்னை தமிழின் விலங்கை அகற்றுதற்காய்
என்ன இடர்வரினும் எங்கள் பெருந்தலைவன்
சொன்னபடி அன்னியரைத் துரத்திச் சென்றான்

பெற்றவர்கள் உனக்கு வைத்த பெயர் நேசன்
கொற்றவனோ பாசறையில் வைத்தது காண்டீபன்
மற்றச்சுகம் அத்தனையும் மறந்து தமிழ் மண்ணில்
பற்றுவைத்தாய் கல்லறையுள் பள்ளி கொள்ளுகின்றாய்

(16-07-94) இன்று சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அஞ்சலி நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு போராளிகளையும், உறவினர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம்
**குடும்பத்தினர்.**

உடுத்துறை வடக்கு,
வடமராட்சி கிழக்கு.
(8752)

## சிறுவர் கலை நிகழ்வுகள்

(குருநகர்)

திருமறைக் கலாமன்ற சிறுவர் கலைக்கூட மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்ச்சிகள் இன்று சனிக்கிழமை மாலை 6-45 மணிக்கு யாழ் பிரதான வீதி மன்ற அரங்கில் ஆரம்பமாகும்.

மாணவர்களின் இசை, நடனம், நாடகங்கள் ஆகியன கலை நிகழ்ச்சியில் இடம் பெறும். (21)

## இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவத்தின் எறிகணைத் தாக்குதலினால் மரணமான யாழ் பல்கலைக் கழக அரசறிவியல் விரிவுரையாளர் கு. ரஞ்ஜகுமாரின் மூன்றாம் ஆண்டு நினைவு தினமான நேற்று முன்தினம்யாழ் போதனா வைத்தியசாலையில் 'இரத்த தானம்' நடைபெற்றது.

இதில் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர், மாணவர்கள் இரத்ததானம் செய்தனர். யாழ் பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றத்தினர் ஏற்பாட்டில் இவ் இரத்ததானம் வழங்கப்பட்டது குறிப்பிடத் தக்கது. [05]

## மாணவ ஆலோசகர் நியமிக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் வி.பி. சிவநாதன் மாணவர் ஆலோசகராக துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் அவர்களால் (1 7.94) கடந்த முதலாம் திகதியில் இருந்து நியமிக்கப்பட்டுள்ளார்.

இதே வேளை இப்பதவியினை இதுவரை வகித்து வந்த புவியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்செ பாலச்சந்திரனின் பதவிக்காலம் மூன்றாண்டுகளுடன் முடிவடைந்ததைத் தொடர்ந்து வி.பி. சிவநாதன் நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத் தக்கது.

(05)

பெல்மதுளையில் பலியான

# அமரசிங்க மரணம் பற்றி நீதி விசாரணை வேண்டும்

(கொழும்பு)

பெல்மதுளையில் நடைபெற்ற தாக்குதலில் உயிர் இழந்த அமரசிங்க தொடர்பாக உடன் நீதியான பொலிஸ் விசாரணை ஒன்றை மேற்கொள்ளுமாறு முன்னாள் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிரிவர்தன பொலிஸ் மா அதிபருக்கு உடன் தந்தி அனுப்பியுள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர் சகிதம் பெல்மதுளை சந்தியை நோக்கி ஊர்வலமாக வந்ததாகவும் வரும் வழியில் அமைந்த ஐ தே.க அலுவலகத்தில் இருந்து தேடி வந்த குண்டர்களே தமது கட்சியினர் மீது தாக்குதல் நடத்தியதாகவும் இதனை நேரடியாக கண்டவர்கள் தமது சாட்சிகளை பொலிஸில் பதிவு செய்திருப்பதாகவும் அத்தந்தியில் தெரிவித்துள்ளார்.

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 06-01 63

தாயகமண்ணில் 16-07-91



**இரத்தினம் வர்ணகுலசிங்கம் (செல்லக்கிளி)**


**ஆதரவாளர் குயிலன்**

மீளாத்துயில் கொண்ட செல்வமே !!!
நாளாயின போதும் மறவா செல்லக்கிளியே
மூன்றாண்டு கழிந்திட்ட வேளையிலும் !!!
மூண்டெழுந்த துயரதும் ஆறாதையா,
மலர்கள் மலரலாம் வாடலாம் - ஆனால் உன்
மலர்முகம் எம் நினைவில் வாடாதையா !!!
தேசப் பற்றினால் பாசநெஞ்சமே காற்றினில்
கலந்திட்டாய்
நேச நினைவலைகளை நீளத்தழுவி அஞ்சலி மலர்
தூவுகின்றோம்.

குயிலன்வீதி,
ஊறணி
வல்வெட்டித்துறை.
(8789)

இங்ஙனம்,
அம்மா, ஐயா, அக்கா,
அத்தான் தம்பிமார்,
தங்கைமார், உற்றார், உறவினர்,

# 18-ம் மாத நினைவலைகள்



# தளபதி கேணல் கிட்டு

(சதாசிவம் கிருஷ்ணகுமார்)

| கிற்றென | பிழம்பென |
|---|---|
| 02-01-1960 | 16-01-1993 |

துளிர்களின் மென்மையில் அங்காந்து
கிளையுந்திப் பறக்கும் காற்றில்
மெய்சிலிர்த்திருந்த கணங்களும் பறிபோகக்
கனன்றெழுந்த

## வேதச்சுடர் நெருப்பே!

சூரியப்பொறியென எழுந்து தினம்
சுடர் வீச - வீசி
புதுயுகங்கள் நடை பழகிய

## தீட்சண்யங்களின் திறவுகோல் நீ!

நினைவிலும் கனவிலும்
ஒளி சொரிந்து வழிகாட்டும் - உன் விழிக்குள்
பிரம்மம் தேடும்

- துணைவி

(சி-9929)

## சிந்தனைக்கு..

அறிவு என்ற சொல்லை சரியாகப் பயன் படுத்தினால் அது உண்மை, சான்றுகள் மூலம் மெய்ப்பித்தல், உறுதியான நம்பிக்கை என்ற மூன்றையும் குறிக்கும்

-றிச்சர்ட் பேட்லி


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 16-07-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024

தபால் பெட்டி எண்- 05


## ஐ.தே.க. மாறவில்லை

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே ஐக்கிய தேசியக் கட்சியின் முடிவு என்பது மீண்டும் தெளிவாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஐ.தே.கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனமும், ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா பௌத்த பீடாதிபதிகளுக்கு எழுதிய கடிதமும் இதனை உறுதிப்படுத்துகின்றன.

ஐ.தே.கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனமானது இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தில் முடிந்தால் அரசியற் தீர்வு காண்பது இல்லையேல் இராணுவத் தீர்வு காண்பது எனக் குறிப்பிடுகின்றது. இது வெளிப் பார்வைக்கு மக்களுக்குச் சிறுதடுமாற்றத்தையும், குழப்பத்தையும் ஏற்படுத்துவதாக இருப்பினும் ஆழமாகச் சிந்தித்துப்பார்த்தால், இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு தான் ஐ.தே.கவின் முடிந்த முடிவு என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பது ஐ.தே.கவைப் பொறுத்து பேச்சளவிலான விடயம் மட்டுமே. அரசியல் இராணுவ நெருக்கடிகள், அழுத்தங்கள் ஏற்படும் போது மட்டுமே ஐ.தே.க அரசியற் தீர்வு பற்றி பேச்சுக்கள் எடுத்தது என்பதே வரலாறாகும்.

இதில் ஐ.தே.கவின் முன்னாள் ஆட்சியாளர்களும் சரி, தற்போதைய ஆட்சியாளர் டி.பி. விஜேதுங்கா ஆயினும் சரி வேறுபட்ட கொள்கை கொண்டவர்கள் அல்ல. இதனை இவர்கள் இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு எனக் கூறி மேற்கொண்ட முயற்சிகள் எவையும் முற்றுப்பெறாமையும்-/-முற்றுப்பெறவிடாமையில் இருந்துமே தெளிவாகப் புரிந்து கொள்ளமுடியும்.

அதிலும், குறிப்பாக ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா வெளிப்படையாகவே இராணுவத்தீர்வை ஆதரிப்பவர். தென்மாகாண சபை தேர்தலில் ஏற்பட்ட தோல்வியின் பின்னர் கூட அவர் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளாதவர் ஆனால் தேர்தல் லாபம் கருதி இராணுவத் தீர்வைப் பற்றிப் பெரிதாக பேசுவதையும் மட்டும் நிறுத்திக் கொண் வர்.

இதனை இனப்பிரச்சினை விவகாரத்தில் ஐ தே. க. இறங்கி வந்துள்ளதாக அர்த்தம் கொள்வது தவறானதாகும். இதுவரையில் ஐ. தே. க. இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கென விதித்த நிபந்தனை எதிலும் அது விட்டுக்கொடுக்கவில்லை: பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்கு தடையான நிபந்தனைகளைப் போட்ட

# பச்சைநிற ஆடை அணிந்தோரே வன்முறைகளில் ஈடுபட்டனர்

### சுதந்திரக் கட்சி செயலாளர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தேர்தல் வன்முறைகளில் ஈடுபடுவோரில், பெரும்பாலானோர் பச்சை நிற ஆடைகளை அணிந்திருந்ததனை தான் நேரில் கண்டதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அமைதியான தேர்தலையே எதிர்பார்ப்பதாகவும் தன்னால் இயன்றவரை தனது கட்சி அமைதி பேணும் என்றும் கூறினார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் வேட்பாளர்கள் இவ் வன்முறைக்கு பின்னணியில் இருப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார். வன்முறைகள் நடைபெறும் இடங்களில் பொலிசார் பக்கச்சார்பாக நடந்து கொள்வதாகவும் அவர்கள் வன்முறைக்கெதிரான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை என்று, தான் கவலை அடைவதாகவும் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இக் குற்றச்சாட்டுகளை சுமத்தினார். தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்;

வேட்பாளர் நியமனப்பத்திரம் தாக்கல் செய்த தினத்திலேயே இவ்வாறு சம்பவம் நடைபெற்றால் தேர்தல் நடைபெறும் நாட்கள் நெருங்கும் போது என்ன நடக்கும்? என வினா எழுப்பியுள்ளார். எனவே எதிர்வரும் தேர்தல் ஒரு சுதந்திர தேர்தலாக அமையும் என்பது தொடர்பாக பெரிய அளவு சந்தேகம்எழுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுதந்திரமான ஒரு தேர்தலே பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு தேவை என்றும் எனவே பொதுஜன ஐக்கிய முன்னணி தேர்தல் ஆணையாளருக்கு சகல ஒத்துழைப்பை நல்கத்தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

மக்கள் ஐக்கிய முன்னணியை பொது ஜன ஐக்கிய முன்னணியுடன் இணைக்க முடியாமல் போனதற்கு காரணம் அக்கட்சி கொழும்பு மாவட்டத்தில் தனக்கு கேட்ட ஆசனத் தொகை கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டதே என தெளிவுபடுத்தினார்.

## வேட்பாளர்கள் மக்களுக்கு முன்மாதிரியாக வேண்டும்

### ஜனாதிபதி ஆலோசனை

(கொழும்பு)

எதிர்காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர் நீங்களே என்பதை மறந்து விட வேண்டாம். ஆகவே மிகவும் பொறுப்புவாய்ந்த விதத்தில் நடந்து கொள்ளுமாறும், மக்களுக்கு முன்மாதிரியாக நடந்து கொள்ள வேண்டுமெனவும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா ஐக்கியதேசியக் கட்சியின் வேட்பாளர்களுக்கு ஆலோசனை கூறியுள்ளார்.

ஐ. தே. க வின் வேட்பாளர்கள் மாநாடு கடந்த புதனன்று நடைபெற்ற போது அதில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், பொதுத் தேர்தல் தொடர்பாக நடைபெறும் சகல வன்செயல்களையும் முறியடிக்கும் நோக்குடன் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்ட உங்களால் இயன்ற சகல உதவிகளையும் வழங்கவேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

சுதந்திரமான தேர்தல் மூலம் ஆட்சி அமைக்க முடியாத நிலையில் எதிர்க்கட்சியினர் வன்முறைகளில் ஈடுபடுகின்றனர். அவர்களின் பீதி ஒருவகையில் நியாயமானது எனக் கேலியாகக் குறிப்பிட்ட அவர் பதிலுக்கு வன்செயல்களில் நீங்கள் ஈடுபடக்கூடாது எனவும் தெரிவித்தார். அத்துடன் தேர்தல் நடவடிக்கையில் ஈடுபடும்போது உத்தியோகபூர்வ வாகனங்களையோ அல்லது உத்தியோகபூர்வ சலுகைகளையோ பயன் படுத்தக் கூடாது எனவும் கேட்டுக் கொண்டார்.

### அவசர காலநிலை காலாவதியானபின்

## தடுத்து வைக்கப்பட்டுள்ளவர் விடுவிக்கப்பட வேண்டும்

### -முன்னாள் கம்பஹா எம்-பி

(கொழும்பு)

அவசரகாலச் சட்டம் காலாவதியானவுடன் தடுப்புக் காவலில் உள்ள சகல அரசியல் கைதிகளும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என கம்பஹா மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார் என வெரித்தாஸ் வானொலி அறிவித்துள்ளது.

அவசரகாலச் சட்டம் காலாவதியானதன் பின்னர் ஜனாதிபதியின் அதிகாரத்தின் கீழ் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் இவர்களை தொடர்ந்து தடுப்புக்

## கிணற்றில் விழுந்த குழந்தை பலி

(வடமராட்சி)

கிணற்றில் தவறுதலாக விழுந்த மூன்று வயது பெண் குழந்தை ஒன்று பலியானது.

இது பற்றித் தெரியவருகையில், கிணற்றில் விழுந்த

## மாவட்டக் கருத்தரங்கு

யாழ் மாவட்டத்திலுள்ள 12 லியோ கழகங்களின் உறுப்பினர்களுக்கான மாவட்டக் கருத்தரங்கொன்று நாளை 17-ம் திகதி காலை 8.30 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட லியோக் கழகத் தலைவர் லயன் ஆ. மகாலிங்கம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்ச்சியில் யாழ்/மாவட்ட அரசாங்க அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். சர்வதேச லயன்ஸ் கழக 306-பி மாவட்ட பிராந்தியத் தலைவர் லயன் எஸ். இராமகிருஸ்ணன், திருமதி றோமன்ட் முத்தையா, லயன் கே. நந்தகுமார், திருமதி நந்தகுமார்,

## வன்முறைகளில்ஈடுபடுவோர் பிணையில் விடுபடக்கூடாது

### -பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

தேர்தல் வன்முறைகளில் கைது செய்யப்படுவோர், அரசியல் வாதிகளினதோ அல்லது வேறு எவரினதோ சிபாரிசுகளினடிப்படையில் பிணையில் விடுதலை செய்யப்படமாட்டார்கள் என பொலிஸ் மா அதிபர் அறிவித்துள்ளார்.

தேர்தல் காலங்களில் பொலிஸாருக்கான கடமைகளும் அறிவிக்கப்பட்டுள்ளன தேர்தல் நடவடிக்கைகளுக்கு பிரதிப் பொலிஸ் மா அதிபர் கனகரத்தினம் பொறுப்பாக இருப்பார்.

தேர்தல் சம்பந்தமான குறிப்பேடுகள் பேணப்பட வேண்டும் எனவும் தேர்தலின் போது நடைபெறும் ஒவ்வொரு சம்பவமும் பொலிஸாரால் தேர்தல் ஆணையாளருக்கு உடனடியாகவே அறிவிக்கப்பட வேண்டும் எனவும் பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேர்தல் தினத்தன்று பழிவாங்கும் விதமாக கைதுகள் இடம்பெறக் கூடாது எனவும் அவ் அறிவுறுத்தலில் கூறப்பட்டுள்ளது.

## போட்டிக்கு ஓடிய தட்டிவான் புரண்டது

(நமது நிருபர்)

நாங்கள் கத்தக்கத்த புயல் வேகத்தில் போட்டி போட்டு ஓடிவந்த எமது தட்டி வான் ஆனைப்பிள்ளை இறக்கத்தில் தடம்புரண்டதில் எனது கை முறிந்தது.

இவ்வாறு கடந்த 13-ம் திகதி நடந்த விபத்தில் படுகாயமடைந்து யாழ் போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவரும் முருகையா (வயது 55) தெரிவித்தார்.

இச் சம்பவம் குறித்து அவர் விபரிக்கையில் சம்பவ தினம் காலை 6 மணிக்கு அல்லிப் பளையிலிருந்து புறப்பட்ட இரண்டு தட்டி வான்களில் ஒன்றில் நான் முகமாலையிலிருந்து ஏறினேன்.

எழுதுமட்டு வாளில் இருந்து இவை இரண்டும் போட்டி போட்டு ஓடத் தொடங்கின. அப்போது வானுக்குள் என்னுடன் நால்வர் இருந்தனர். நாங்கள் நால்வரும் சேர்ந்து இப்படி கண்மூடித்தனமாக ஓடாதீர்கள் எங்களுக்குப்பயமாக இருக்கிறது என முன் ஆசனங்களை இறுக்கப் பிடித்தவாறு பல தட்வைகள் கதறினோம்.

எமது கோரிக்கையையும் உதாசீனம் செய்து அசுர வேகத்தில் வந்த எமது தட்டிவான் ஆனை பிள்ளை இறக்கத்தில் தடம்புரண்டது. இதனால் நாங்கள் காயமடைந்தோம் எனது கை முறிந்துவிட்டது இத்தகைய சாரதிகளின் பொறுப்பற்ற செயல்களால் எனது வாழ்க்கையே நாசமாகிவிட்டது என்றார வேதனையுடன்.

## பாராளுமன்றை கூட்ட ஜனாதிபதி டி. பி. அச்சம்

(கொழும்பு)

வேட்பாளர் பட்டியலில் தமது பெயர் இடம் பெறாததினால் ஐ. தே. க. மீது வெறுப்பு கொண்டுள்ள முன்னாள் கட்சி எம். பிகள் அவசரகாலசட்டம் மீதான வாக்கெடுப்பில் அரசுக்கெதிராக வாக்களிக்கலாம் என்ற அச்சம் காரணமாகவே இச்சட்டத்தை நீடிப்பதற்காக பாராளுமன்றத்தை ஜனாதிபதி விஜேதுங்கா கூட்ட வில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுடன் காலாவதியான அவசரகாலச் சட்டத்தை மேலும் நீடிக்க தேர்தல் பிரசாரங்கள் நடைபெறும் இவ்வேளையில் பாராளுமன்றை கூட்டினால் அது ஆளும் கட்சிக்கு பாதகமாக அமையலாம் என ஜனாதிபதி எண்ணியே அவர் இதற்கென பாராளுமன்றை கூட்டவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

### காற்பந்தாட்ட இறுதிப் போட்டி

## இத்தாலி முன்னணி வீரர்

களை ஆரம்பிப்பதற்கென விதித்த நிபந்தனை எதிலும் அது விட்டுக்கொடுக்கவில்லை: பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்கு தடையான நிபந்தனைகளைப் போட்ட வண்ணமே உள்ளது.

ஆனால், அரசியற் தீர்வில் அக்கறையுள்ளதாகக் காட்டிக் கொள்வதில் மட்டும் ஐ.தே.க. தீவிரமாக இருந்து வருகின்றது. இதன் வெளிப்பாடாகவே அரசியல் தீர்வு காண்பதற்கு முயற்சிக்கப்படும் என தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட வேண்டி வந்ததாகும், ஆனால், இப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் ஐ.தே.கவின் முயற்சி எந்தளவினதாக இருக்கும் என்பதைக் கடந்த காலமே நிரூபித்துள்ளதால், தேர்தல் விஞ்ஞாபனத்தின் பிற்பகுதியில் உள்ள இராணுவத்தீர்வு காண்பதென்பது ஐ.தே.கவின் முடிவு என்பதில் எவருக்கும் சந்தேகம் தேவையில்லை.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஐ தே, க. குறிப்பிட்டதற்கு வேறு விளக்கங்களை அளிப்பதற்கும் சிலர் முற்படக் கூடும், ஆனால் அதனையும் நீண்ட நேரத்திற்கு டி.பி.விஜேதுங்கா விட்டு வைக்கத்தயாராகவில்லை. இனப்பிரச்சினையில்ஐ.தே.கவின் நிலைப்பாடுஎன்னஎனக்கேள்வி எழுப்பிய பௌத்த பீடங்களைச் சேர்ந்தவர்களுக்கு டி.பி. விஜேதுங்கா யுத்தமே முடிவு எனத் தெளிவாகவே அறிவித்ததன் மூலம் இதற்கு முடிவு கண்டுள்ளார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் இராணுவ பலத்தை குறைப்பதற்காக இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் எந்தவித மாற்றமும் இருக்காது என்பதே டி பி. விஜேதுங்கா பௌத்தபீடாதிபதிகளுக்கு அனுப்பியுள்ள தகவலாகும். அதாவது யுத்தம் தொடரும் என்பதன் பகிரங்க அறிவிப்பே இதுவாகும்.

இதேசமயம் டி.பி. விஜேதுங்காவினதும், ஐ.தே க வினதும் இந்நிலைப்பாடு ஒருவகையில் வரவேற்கத்தக்கதொன்றே ஏனெனில் இனப்பிரச்சினை விவகாரத்தில் ஐ.தே.க தமது நிலைப்பாட்டை தெளிவாகவே முன்வைத்துள்ளது என்பதனாலாகும். இதில் குழப்பம் அடைய எதுவுமே இல்லை.

இந்நிலையில் தமிழ்மக்கள் தெளிவாகவே சில விடயங்களைப் புரிந்து கொள்ளமுடியும். ஐ.தே.க தேர்தலில் வெற்றி பெற்றாலோ அன்றி தோல்வி அடைந்தாலோ எதுவாக இருப்பினும் ஐ.தே.க இனப்பிரச்சினை விடயத்தில் இராணுவத்தீர்வையே நாடி நிற்கும் என்பதும் பொதுஜன முன்னணி ஆட்சி அமைக்கும் பட்சத்தில் கூட யுத்தம் தவிர்க்கமுடியாததாகவே இருக்கும் என்பவையே ஆகும்.

இந்நிலையில் இலங்கையில் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வென்பது சாத்தியமாகப் போவதில்லை. தமிழருக்கு என ஒரு அரசு அமையும் வரை யுத்தத்தை சிங்களக்கட்சிகள் கைவிடப்போவதுமில்லை. சிங்கள அரசுடன் இணைந்து தமிழரின் பிரச்சினைக்குத் தீர்வு காணலாமென யாராவது எண்ணுவார்களேயானால்அதுபகற்கனவு. அவ்வாறு கூறுபவர்கள் தமிழ் மக்களை ஏமாற்றி சுயலாபம் தேட முற்படும் ஏமாற்றுப் பேர்வழிகள்.

---

குழந்தை ஒன்று பலியானது.

இது பற்றித் தெரியவருகையில், கிணற்றில் விழுந்த தனது குழந்தையை உயிருடன் மீட்டுக் கொண்டு ஏறிய தந்தைக்கு திடீரென வலி ஏற்பட்டதனால் மீண்டும் விழுந்ததில் அக் குழந்தை பலியானது.

இப்பரிதாபகரமான சம்பவம் நேற்று முன்தினம் துன்னாலையில் நிகழ்ந்தது.

(யோ)

---

தின் கீழ் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் இவர்களை தொடர்ந்து தடுப்புக் காவலில் வைத்திருப்பதோ அன்றி சிறைச்சாலைகளில் வைத்திருப்பதையோ பொதுஜன ஐக்கிய முன்னணி கடுமையாக எதிர்ப்பதாகவும் தேவை ஏற்பட்டால் இதற்கான சட்ட நடவடிக்கை கூட எடுக்க தமது கட்சி தயங்கப் போவதில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

---

மதி றோமன்ட் முத்தையா, லயன் கே. நந்தகுமார், திருமதி நந்தகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார்கள்.

மாவட்ட லியோக் கழகத்தால் நடாத்தப்பட்ட நாவன்மைப் போட்டிகளிலும், விளையாட்டுப் போட்டிகளிலும் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்களும், சான்றிதழ்களும் இந்நிகழ்வின்போது வழங்கப்படும்.

---

# இத்தாலி முன்னணி வீரர் கலந்துகொள்வது சந்தேகம்

உலகக் கோப்பை காற்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் இத்தாலியின் முன்னணிவீரர் றொபார்ட்டோ பாகியோ கலந்துகொள்வது சந்தேகமே என தெரியவருகிறது.

பல்கேரியாவுடனான அரை இறுதி ஆட்டத்தில், இரண்டு கோல்களைப் போட்டு, இத்தாலியை இறுதியாட்டத்துக்கு கொண்டு சென்றவரான இவரது காலில், சுளுக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால், 48 மணிநேரம் ஓய்வு எடுக்குமாறு இவர் அறிவுறுத்தப்பட்டுள்ளார். பிரேசிலை எதிர்த்து இறுதியாட்டத்தில் இவர் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஐம்பது வீதமே என இத்தாலிய குழுவின் மருத்துவர் தெரிவித்துள்ளார்.

---

## ராக்கிங்கிற்கு

மக்களும் அதிக அக்கறை காட்டி வருவதை எமது தேசம் நன்கறியும் இதற்காக தனியான பல அமைப்புகள் உருவாக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றன இச் செயற்பாடு எமது மாணவ சமுதாயத்தின் எதிர்காலம் மிக வளமுடனும், நலமுடனும் ஆரோக்கியமான ஒரு சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்கேயாகும். இதற்காக எமது இயக்கமும், மக்களும் பல அற்புதமான தியாகங்களை புரிந்து வருகின்றனர். எமது கல்வியுடன் எமது பண்பாடும் கட்டி வளர்க்கப்படுகின்றன.

எமது தேசம் இம் மாணவ சமுதாயத்திடமிருந்து பல வரலாற்றுக்கடமைகளைஎதிர்பார்க்கின்றது. ஆனால், எமது கல்வியின் ஒரு அங்கமான பல்கலைக்கழக கல்விக்காக எமது மாணவர் சமுதாயத்தின் ஒரு பகுதியினர் பல்கலைக்கழகம் புதிதாகச் செல்லும்போது ''ராக்கிங்'' என்னும் பெயரில் பல வேதனைமிக்க சம்பவங்களுக்கு முகங்கொடுக்கின்றனர். பலர் இவ் ''ராக்கிங்'' என்னும் செயலுக்குப் பயந்து செய்வதறியாது உள்ளனர். இருந்தும் இதனால் பாதிக்கப்படும் மாணவர்களின் பெற்றோர்கள், மாணவர்கள் பலர் எம்மிடம் வந்து முறையிடத் தொடங்கியுள்ளனர்.

ஓர் உன்னதமான சமுதாய அமைப்பை கட்டியெழுப்புவதற்காக போராடிக் கொண்டிருக்கும் நாம், இவ்வாறான அநாகரிகமான அடாவடித்தனங்களை ஒருபோதும் அனுமதிக்கமுடியாது. ஆகவே இவ்வாறான ராக்கிங் என்னும் அநாகரிகச் செயலில் ஈடுபடுவோர் உடனடியாக இவற்றை நிறுத்தி எமது தேசத்தின் கல்வி, பண்பாடு என்பவற்றை வளமுடன் கட்டி வளர்ப்பதற்கு முன்வருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

எமது வேண்டுகோளை மீறி எமது தேசத்தின் பெற்றோர்களும், மாணவர்களும் துன்பப்படும் முறையில் ராக்கிங் புரிபவர்கள்மீது தமிழீழ காவல்துறையினர் இன்று தொடக்கம் நடவடிக்கை எடுப்பர் என்பதை அறியத்தருகின்றேன்.

---

## வீரச்சாவு

வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வீரவேங்கை கௌதமி (கந்தசாமி சாந்தி, அராலி தெற்கு, வட்டுக் கோட்டை) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

---

## விடு

றதாகவும் இராணுவத்தினர் இவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளவே ஏனையோர் தப்பியோடி வந்துவிட்டதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தின்போது உயிரிழந்தவரின் உடல் நேற்று மாலையே மீட்கப்பட்டு யாழ் போதனா மருத்துவமனைக்கு எடுத்து வரப்பட்டது (சி)

---

## எதிரணி

கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலநறுவை மாவட்ட வேட்பாளரான திலக் பண்டார மகாவேவ என்பவரே கைது செய்யப்பட்டவராவார்

கைது செய்யப்பட்டவர்கள் பொலநறுவை மாவட்டபதில் நீதவானினால் இம் மாதம் 18ந் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.

---

## மதவாச்சியில்

ராம்.

இவ்வாறு தாக்குதலுக்கு இலக்கான 22 பேரும் அனுராதபுர ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இதில் இருவரது நிலை கவலைக்கிடமாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து அனுராதபுரம் பொலிசாரிடம் புகார்செய்யப்பட்டுள்ளதாம்.

---

## மன்னாரில்

இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு வல்வெட்டித்துறை சந்தியருகில் மக்கள் அஞ்சலிக்கு வைக்க பட்டு அஞ்சலிக் கூட்டமும் இடம் பெறும். அஞ்சலிக் கூட்டம் நிறைவுற அணிவகுப்பு மரியாதையுடன் வடமராட்சிக் கோட்ட மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு புனித விதை குழியில் வித்துடல் விதைக்கப்படும்.

---

## விசேட

கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு தமிழீழ நிர்வாக சேவை பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

---

## பகிரங்க ஏல விற்பனை

(பருத்தித்துறை)

பருத்தித்துறையில் அமைந்துள்ள தமிழீழ மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட குற்றவியல் வழக்குகளில் சான்றுப் பொருட்களாக கொணரப்பட்டு பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் சில இன்று காலை 9 மணிக்கு மன்றின் முன்றலில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

ஏலப்பொருட்களை காலை 8 மணி முதல் பார்வையிடலாம் எனவும் வாங்கும் பொருட்களின் பணத்தை உடன் செலுத்தி மாலை 4 மணிக்கு முன் எடுத்துச் செல்லப்படல் வேண்டும் எனவும் பதிவாளர் அறிவித்துள்ளார்.

---

## இலங்கை

னத்தில் வாக்குறுதிகளாக அளிக்கப்பட்டுள்ளன

இதேவேளை ஐக்கிய தேசியக்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் வடக்கு - கிழக்குப் பிரச்சினையை இனப் பிரச்சினையாக கொள்ளவில்லை எனவும் பிரேமதாசாவின் கடந்த தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு முற்றிலும் மாறுபட்டதாக அமைந்துள்ளது எனவும் அவதானிகள் கூறுகின்றனர்.

---

## அவசரகால

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் மூலம் செய்ய முடியும் என தெரிவிக்கின்றனர்.

அவசரகாலச்சட்டம் காலாவதியானால் வடபகுதிக்கு பற்றரி, எரிபொருள் என்பன கொண்டு செல்ல விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட வேண்டும் என்றும் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.

---

## புலிகளின் குரல்

நிகழ்ச்சி நிரல்

**1994. 07. 16**

சனி இரவு

08. 01 ற்கு அறிவியற்கலசம்

08. 10 ற்கு நிகழ்வும் பகிர்வும்

08. 25 ற்கு நேயர் கடிதங்கள்

08. 30 ற்கு செய்திகள்

08. 40 ற்கு லெப்ரினன்ட் கேணல் நீலன் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி

**1994. 07. 17**

ஞாயிறு காலை

07. 02 ற்கு மாவீரவணக்கம்

07 15ற்கு களத்தில்மலர்ந்தவை

07. 30 ற்கு செய்திகள்

07. 35 ற்கு பத்திரிகைச் செய்திகள்

07. 40 ற்கு களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சித் தொடர்

## புகைப்படக் கலைஞர்களுக்கு ஓர் பெருர் வாய்ப்பு!

உங்கள் கலை வெளிக்கொணர்விற்கும், திறமைக்குமான ஓர் சந்தர்ப்பம்!!

தமிழீழ விடுதலைப் புலிகளின் புகைப்படப் பிரிவினரால் நடாத்தப்படும்

## புகைப்படப் போட்டி

15-0.-94 தொடக்கம் 15-10-94 வரை.

விண்ணப்பங்களுக்கும் விபரங்களுக்கும் கீழ்க் காணும் இடங்களை நாடுங்கள்.

★ திரு. சு. தங்கத்துரை
பிரியா வீடியோ,
புலோலி, மந்திகை.

★ ராஜேஸ் ஸ்ரோன் வீடியோ-அன்-ஸ்ரூடியோ
கண்டி வீதி,
சாவகச்சேரி.

★ உதயம் ஸ்ரூடியோ,
அரசுனா சாலை, யாழ்ப்பாணம்:

★ கலை ஊடக இணையம்,
117, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

மேலதிக ஆலோசனைகளுக்கு

புகைப்படப் பிரிவு (அருச்சுனா) திருநெல்வேலி

முதற்பரிசு:- தங்கப்பதக்கமும் பணப்பரிசும்
இரண்டாம் பரிசு:- வெள்ளிப்பதக்கமும் பணப்பரிசும்
மூன்றாம் பரிசு:- வெண்கலப் பதக்கமும் பணப்பரிசும்

தெரிவு செய்யப்படும் மேலும் 27 புகைப்படங்களிற்கு தேசிய மட்டத்திலான பெறுமதி வாய்ந்த பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

போட்டி விண்ணப்ப விலை: ரூபா 20/-

புகைப்படப் பிரிவு,
அரசியற்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-9935)

## மெய்வல்லுநர் போட்டிகள்

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக் குழு நடாத்தும் மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 1. 30 மணியளவில் யாழ். மத்தியகல்லூரியில் நடைபெறவுள்ளது. பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ. சிவானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் கல்வி வலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமி பிரதம விருந்தினராகவும், செஞ்சோலை பொறுப்பாளர் செல்வி நஜனனி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## வெள்ளி விழா

சுதுமலை தெற்கு ஆனைக்கோட்டை அம்பாள் ச ச. நிலையத்தின் வெள்ளி விழா இன்று பிற்பகல் 5. 00 மணியளவில் நிலையத் தலைவர் க. சிவநேசன் தலைமையில், நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது

## கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

கே சி. சி. சீ. வெற்றிக்கிண்ண துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் முதற் சுற்று ஆட்டங்களில், இன்று காலை 8. 00 மணிக்கு கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென்றலைட்ஸ் சொக்சும், பிற்பகல் 1. 00 மணிக்கு பற்றீசியன்சை எதிர்த்து ஜொனியன்சும் மோதுகின்றன

## சேவைநலன் பாராட்டு

பலாலி ஆசிரியர் கலாசாலையில் அதிபராகப் பதவி வகித்து ஒய்வுபெற்ற திரு. ஆர் எஸ். நடராசா அவர்களின் சேவைநலன் பாராட்டு விழாவும், அவரது கட்டுரைத் தொகுப்பான ''காலத்தால் கலையாத கடமை'' என்னும் நூல் வெளியீட்டு விழாவும் இன்று காலை ஒன்பது மணியளவில் கலாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்ச்சியை பலாலி ஆசிரியா பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்று வெளியேறிய ஆசிரியர் மன்றம் ஏற்பாடு செய்துள்ளது.

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



### வீரவேங்கை குணம்

(செல்வரெட்ணம் சுரேஷ்குமார்)

தாவடி, கொக்குவில்

பிறப்பு: 15-04-1972 வீரச்சாவு: 16-07-1990

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

- குடும்பத்தினர்

(8837)

## நன்றி நவிலல்

எனக்கு ஒளியாயிருந்து எனக்கு வேண்டிய அனைத்தையும் நான் கேட்டபடி தந்தருளிய பரிசுத்த ஆவியையும். யேசுவின் திரு இருதயத்தையும், போற்றிப் புகழ்ந்து வாழ்த்தி, இதுவரை காலமும் எனக்களித்த எல்லா உதவிகட்கும் நன்றிகூறி மகிமைப்படுத்த இதைப் பிரசுரிக்கிறேன். உங்கள் அருட்கொடைகள் மூலம் இன்னும் தர இருக்கும் ஆன்ம சரீர நன்மைகளுக்கும் நன்றிகூறி வணங்கி நிற்கிறேன்.

எனது அன்பான இனிய தேவ தாயாருக்கும், கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலரான அர்ச். யுதாததேயுவுக்கும் நான் கேட்ட உதவி கிடைத்தமைக்கும், இன்னும் எனக்களித்த எல்லா உதவிகட்கும் நன்றிகூறி இதைப் பிரசுரிக்கிறேன். இன்னும் எனக்குத் தர இருக்கும் ஆன்ம சரீர உதவிகளுக்கும் நன்றிகூறி வாழ்த்தி நிற்கிறேன்.

(8834) Mary Anne .B

## மரண அறிவித்தல்கள்



### திரு. சு. சிவவாகீசர் B. A. அவர்கள்

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் பொதுச் செயலாளரும், வட்டு. திருஞானசம்பந்த வித்தியாலய முன்னைநாள் அதிபரும் சிறந்த சமூகத் தொண்டருமாகிய சுப்பிரமணியம் சிவவாகீசர் 14-07-1994 இல் காலமானார். அன்னார் தெல்லிப்பழை திரு. வ. சுப்பிரமணியம் (செல்லையா மாஸ்ரர்) திலகவதி அவர்களின் சிரேஷ்ட புதல்வனும், தொல்புரம் உமாதேவியின் அன்புக் கணவரும், சிவகுமார், சிவயோகன், தயாநிதி ஆகியோரது அன்புத் தந்தையும், திருமதி மலைமகள் இராமநாதன், திருமதி நீலாம்பிகை சண்முகலிங்கம், காலஞ்சென்ற விமலநாதன், திருநாவுக்கரசு ஆகியோரின் அருமைச் சகோதரரும், சந்திராதேவி சண்முகலிங்கத்தின் மைத்துனரும், திவாகரன், உவரிணா, சுதர்சினி, சொரூபிணி ஆகியோரது அன்புப் பெரிய தந்தையும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (16 - 07 - 94) சனிக்கிழமை தொல்புரம் மேற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3. 00 மணிக்கு மூளாய் மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதைத் தெரிவிக்கின்றோம்.

மனைவி உமாதேவி சிவவாகீசர்
சகோதரி மலைமகள், இராமநாதன்,
ஸ்ரீ துர்க்காதேவி
தேவஸ்தானம் தெல்லிப்பழை

தொல்புரம்
மேற்கு.
16-07-94

(8825)

### தம்பையா முருகேசு

(இளைப்பாறிய இ. போ. ச. சாரதி)

தம்பையா முருகேசு 15. 07. 94-ல் காலமாகி விட்டார். இவர் இராசமணியின் அன்புக் கணவரும், (காலம் சென்ற) கலாநிதி, ரவிந்திரராசா (சுவிஸ்), புஸ்பராசா (சுவிஸ்), சிவாநிதி (சுவிஸ்), குணாநிதி (கைதடி). ஜீவராசா (கைதடி) ஆகியோரின் அன்புத் தந்தையாவார், குமுதினி (சுவிஸ்), சத்தியேஸ்வரி (சுவிஸ்), கிருஷ்ண பகவான் (சுவிஸ்), ரவி (மாங்குளம்) ஆகியோரின் மாமனாரும், சஜந்தனின் அன்புப் பேரனும் ஆவார்.

16. 07 94 இன்று 12 மணியளவில் ஊற்றல் மயானத்திற்கு பூத உடல் தகனக்கிரியைக்சாக எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

கைதடி கிழக்கு,
கைதடி

(8836)

ஜோ. எபட்டனின்

## ஜெசித்தாரா

வழங்கும்

காவிச்செல்லும் உணவுப் பொட்டலங்கள் நண்பகல் 11 45 மணிமுதல் ...

தமிழீழத்தின் பிரபலமான
சமூக பொருண்மிய விஞ்ஞான

வீரத்துக்கு விளக்கமாகி நின்றவனின்

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

ஆய்வு இதழான

"ஆதாரம்"

சஞ்சிகையினை
யாழ்ப்பாணத்தில்
வடமராட்சி, தென்மராட்சி
வலிகாமம் போன்ற இடங்களில்
விற்பனை செய்யக்கூடிய
விற்பனை முகவர்கள்

பின்வரும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

ஆதாரம்
செய்தித் தொடர்பு வெளியீட்டுக்கிளை,
முதன்மைச் செயலகம்,
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
தாவடி,
தமிழீழம்

★ தெரிவாகும் முகவர்களுக்கு நியாயமான, விற்பனைக்கழிவு வழங்கப்படும்.

★ விண்ணப்ப முடிவுத் திகதி 23-07-1994.

(9934)

---

பிற்பகல் 3.45 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

விலை ரூ 27/50

பச்சை இறைச்சி.

மீன்

எதுவானாலும்

ஜெசித்தாரா,
சுண்டுக்குளி மகளிர்
கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

(சி/9920)

---

யாழ். ஸ்ரீதரில்

தினசரி 4.00 மணி


**உயிராயுதம்**

தினசரி 6.00 மணி
சனி, ஞாயிறு 10.30, 6.00 மணி

JURASSIC PARK

(சி-9786)

---



முத்தாக: 01-01-1975

வித்தாக: 16-07-1991

## 2 ஆம் லெப்டினன்ட் மௌலி

தாமோதரம்பிள்ளை-மணிவாசகன்-சபேசன்

(சங்கத்தார்கேணி - புங்குடுதீவு-3)

''வெற்றிலைக் கேணிச் சமரதனில்
வெற்றிக்கொடியை நாட்டி, அந்தக்
கற்றைச் சடையான் பாதமதைக்
கடுகிச் சேர்ந்த எம்மௌலி!
உற்றதலைவன் ஆணையின் கீழ்
உனதுஈழத் தமிழ் மண்ணைப்
பெற்றே தீர்வோம்! சபேசன்நீ
பெறுவாய் சாந்தி! ஓம்சாந்தி!''

கோவில் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்,
நண்பர்கள் - உறவினர்கள்.

(8835)

---

கைதடி

(8836)

---

## திரு. சாம்பசிவம் அச்சுதமூர்த்தி

(சிவில் எஞ்சினியர்)

திரு சாம்பசிவம் அச்சுதமூர்த்தி 8-7-94 அன்று அதிகாலை அநுராதபுரத்தில் இடம்பெற்ற ரயில் குண்டு வெடிப்பின்போது அகாலமரணமானார்.

அன்னார் திரு. முத்தையா சாம்பசிவம் (இளைப்பாறிய சங்கீத ஆசிரியர்), காலஞ்சென்ற சிவபாக்கியம் தம்பதிகளின் இளைய மகனும். சிவமூர்த்தி (இயக்குநர் ஏஜென்சி நிறுவனம் ஓமான்) குகமூர்த்தி, தனேஸ்வரி, ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், திரு. பாலசிங்கம், இராஜசேகரம் ஆகியோரைச் சிறிய தந்தையராகக் கொண்டவரும், துரைராசா, திருநாவுக்கரசு, கனகசேகரம், இராஜசேகரம், ஆகியோரின் ஒன்றுவிட்ட சிறிய தந்தையாரும், பா. கானமூர்த்தி, பா. ஜெயபாலன், பா. சிறீதரன் கா. கோமதி இ. அருந்தவமூர்த்தி, இ. சுந்தரமூர்த்தி, இ. இராஜேஸ்வரி, தி. கணநாதன், து. அகிலேஸ்வரி, கல்யாணி-கேதீஸ்வரி ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரரும், சச்சிதானந்தம். கோபால கிருஷ்ணன், யோகராஜா, சற்குணம் (அதிபர்), இராஜி. செல்லம்மா, சிவபாக்கியம் வசந்தி, மலர், சரஸ்வதி, இலட்சுமி, பிரேமலோகேஸ்வரி ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் நீர்கொழும்பிலுள்ள அவரது சகோதரரின் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஈமக்கிரியைகள் அவ்விடத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மு. சாம்பசிவம்
தந்தை

மாதனை,
பருத்தித்துறை.

(8833)

---

வெளிவருகிறது

# இன்னும் ஒரு நாடு

(சி/9937)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது